பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

20 11 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சத்தீஸ்கர், தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இன்று முதல் 22ஆம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

2. உலகளாவிய மாறிவரும் சூழலுக்கு ஏற்ப ஐ.நா. சபையில் மாற்றங்களை மேற்கொள்வது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

3. இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இன்று தொடங்குகிறது.

4. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது சீனா, இந்தியாவுக்கு எதிராக தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

5. இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் வேலவன் செந்தில்குமார், ரமீத் தாண்டன், ஜோஷ்னா சின்னப்பா, அனஹத் சிங், தன்வீ கண்ணா ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சத்தீஸ்கர், தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இன்று முதல் 22ஆம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இன்று சத்தீஸ்கர் மாநில அரசு சார்பில் அம்பிகாபுரில் நடைபெறும் பழங்குடியினர் பெருமை தின கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக அவர் பங்கேற்கிறார்.

நாளை செகந்திராபாதில் உள்ள குடியரசுத்தலைவர் நிலையத்தில் பாரதிய கலா மஹோத்சவ் விழாவை அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

இதில் குஜராத், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், கோவா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

நாளை மறுநாள் ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஸ்ரீ சத்ய சாய்பாபா நூற்றாண்டு விழாவிலும் குடியரசுத்தலைவர் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

உலகளாவிய மாறிவரும் சூழலுக்கு ஏற்ப ஐ.நா. சபையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தலைமை நீதிபதிகளின் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்த மாற்றங்கள் தற்கால சவால்களை எதிர்கொள்வதாக இருக்க வேண்டும் என்றார்.

உலக நாடுகள் தீவிரவாதம், பருவநிலை மாற்றம் டிஜிட்டல் அச்சுறுத்தல் போன்ற பிரச்சினைகளை சந்தித்து வரும் வேளையில் இவற்றுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

அரிவால்செல் ரத்தசோகை நோயை கட்டுப்படுத்துவதற்கான முதலாவது உள்நாட்டு மரபணு சிகிச்சை முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

CRISPER எனப்படும் இந்த முறையை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் புதுதில்லியில் நேற்று அறிமுகப்படுத்தினார்.

அப்போது பேசிய அவர், இந்தப் புதிய சிகிச்சை முறை அரிவால்செல் ரத்த சோகையைக் கட்டுப்படுத்துவதில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

பழங்குடியின மக்களை அதிகம் பாதிக்கும் நோய்க்கான இந்த சிகிச்சை முறைக்கு பிர்சா-101 என பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிஹார் முதலமைச்சராக திரு. நிதிஷ் குமார் 10வது முறையாக இன்று பதவியேற்க உள்ளார்.

பட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நடைபெறும் விழாவில் ஆளுநர் திரு. ஆரிஃப் முகமது கான் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க உள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிஜேபி மூத்த தலைவர்கள் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் இதில் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

நாடு முழுவதும், புதுமை கண்டுபிடிப்பு சூழல் மற்றும் நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கான, நீடித்த ஒப்பந்தம் ஒன்றை, நித்தி ஆயோக்கின் அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கமும், CFA நிறுவனமும் மேற்கொண்டுள்ளன.

இந்த கூட்டு முயற்சி, நாடு முழுவதும், நிதி எழுத்தறிவு, விதிமுறை சார்ந்த முடிவு எடுத்தல், மற்றும் ஆட்சி நிர்வாகம் உட்பட, வேகமாக விரிவடைந்து வரும் கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோர் சூழலை வலுப்படுத்துவதில், ஒரு முக்கிய நடவடிக்கை என நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

இந்த ஒத்துழைப்பு, அடல் ஆய்வகங்கள், அடல் சமுதாய கண்டுபிடிப்பு மையம் போன்றவற்றிற்கு, உறுதுணையாக இருக்கும் எனவும், அந்த அமைப்பு கூறியுள்ளது.

<<<<>>>>

போர்க்களத்தில் பயன்படுத்துவதற்காக, உள்நாட்டிலேயே வடிவமைத்து டிஜிட்டல் முறையில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய வகை மேலாடைக்கு, இந்திய ராணுவம் அறிவுசார் சொத்துரிமை பெற்றுள்ளது.

இந்த மூன்றடுக்கு மேலாடை, அதிநவீன தொழில்நுட்ப ஜவுளி ரகத்தில், போர்ச் சூழலியலுக்கு ஏற்ற வடிவமைப்புடன், அணிவதற்கு எளிதாக அமைந்திருப்பதுடன், பல்வேறு தட்பவெப்ப நிலையிலும் பயன்படுத்தக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சம் தெரிவித்துள்ளது.

தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆடை, நாட்டின் போர்த் திறனை வெளிப்படுத்துவதாகவும், வீரர்களை பாதுகாக்கக் கூடியதாகவும் உள்ளது என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

56வது இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இன்று வண்ணமயமான அணிவகுப்புடன் தொடங்குகிறது.

9 நாட்கள் நடைபெற உள்ள இந்த திருவிழாவில் ஜப்பான், ஸ்பெயின் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் திரைப்படங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட உள்ளது.

80க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த திரைப்படத் துறையினர் பங்கேற்கும் இந்த விழாவில், இந்திய திரைப்படங்கள் உட்பட பல்வேறு நாடுகளில் தயாரிக்கப்பட்ட 270க்கும் அதிகமான திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தொடக்க அமர்வில் பிரேசில் திரைப்படமான The Blue Trial திரையிடப்பட உள்ளது.

<<<<>>>>

வருங்கால தலைமுறையினருக்கு ஏற்ப அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட முதலாவது அஞ்சலகம், தில்லி ஐ.ஐ.டி. வளாகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தொலைத் தொடர்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த அஞ்சலகம் திறக்கப்பட்டதன் மூலம், India-Post-ன் நவீனமயமாக்கல் பயணம், குறிப்பிடத்தக்க மைல் கல்லை எட்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அஞசலகங்களை, வலிமையான, தற்கால மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு உகந்த வகையில், மாற்றியமைக்க வேண்டும் என்ற தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா-வின் தொலைநோக்கைப் பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த புதுப்பிக்கப்பட்ட அஞ்சலகம், Wi-Fi வசதியுடன், கலைநயமிக்க ஓவியங்கள் தீட்டப்பட்டு, எழில்மிகு வளாகமாக காட்சியளிக்கிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், கல்வி நிலைய வளாகங்களில் உள்ள 46 அஞசலகங்கள், அடுத்த மாதம் 15-ந் தேதிக்குள் புதுப்பிக்கப்படும் என்றும் தொலைத்தொடர்புத் துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் நிகழ்ந்த பல்வேறு குற்றச் சம்பவங்களில் தொடர்புடைய Anmol Bishnoi-யை, 11 நாள் தேசிய புலனாய்வு முகமை காவலில் வைக்க தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் பாபா சித்திக் மற்றும் நடிகர் சல்மான்கான் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், பஞ்சாபி பாடகர் சித்து மூசேவாலா கொலைவழக்கு உட்பட, அம்மாநிலத்தில் நிகழ்ந்த பல்வேறு குற்றச் சம்பவங்களில் தொடர்புடைய பிஷ்னோயை, 15 நாள் காவலில் எடுத்து விசாரிக்க, தேசிய புலனாய்வு முகமை அனுமதி கோரிய நிலையில், நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த அன்மோல் பிஷ்னோய், அவரது சகோதரர் லாரன்ஸ் பிஷ்னோயுடன் சேர்ந்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதோடு, கடந்த 2022ஆம் ஆண்டு முதல் தலைமறைவாக இருந்து வந்தார்.

<<<<>>>>

இந்தியா மற்றும் உலகின் பிற நாடுகளில் உள்ள 6 நகரங்களின் மக்கள் தொகை மட்டும், 2050-ம் ஆண்டுக்குள் 500 மில்லியனைத் தாண்டும் என்று, ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

நகரமயமாதல் குறித்து, ஐ.நா. வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், உலகின் மொத்த மக்கள் தொகையான 820 கோடியில், 45 சதவீதத்தினர், தற்போது நகர்ப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், எகிப்து, எத்தியோப்பியா, காங்கோ, நைஜீரியா நாடுகள், உலகில் நகர்ப்புறங்களில் வசிப்போரின் மொத்த மக்கள் தொகையில், பாதிக்கும் மேற்பட்டோரைக் கொண்டவையாக இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது சீனா, இந்தியாவுக்கு எதிராக தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா - சீனா இடையிலான பொருளாதாரம், பாதுகாப்பு உறவுகள் குறித்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட

ஆய்வறிக்கையில், இந்திய போர் விமானங்கள் பாகிஸ்தான் ராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது போன்று வெளியான புகைப்படங்கள் செயற்கை நுண்ணறிவு முறையில் சீனாவால் வெளியிடப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் வேலவன் செந்தில்குமார், ரமீத் தாண்டன், ஜோஷ்னா சின்னப்பா, அனஹத் சிங், தன்வீ கண்ணா ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

மஸ்கட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மானவ் விகாஷ் தக்கார் - Manush Utpalbai Shah இணை, ஈரானின் Hamid Shams - போலந்தின் Mateusz Zalewsai இணையை 11-9, 11-3, 11-6 என்ற செட் கணக்கில் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Diya Paras Chitale - Swastika Ghosh இணை, போர்ச்சுகலின் Fu Yu - Jieni Shao இணையை 7-11, 13-11, 11-8, 5-11, 12-10 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.

<<<<The End>>>>